பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

<u>கடிதம் எண்.13364/ப.க.4(1)/2016–1, நாள் 01.06.2016</u>

அனுப்புநர்
திருமதி. த.சபிதா. இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தோற்றுவிக்கப்பட்ட 5000 ஆசிரியரல்லாத பணியிடங்கள் – மே 2016 மாதத்திற்கான சம்பளம் வழங்க அதிகார (pay authorization) - ஆணை வேண்டுதல் – குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக் கல்வித் துறை, நாள் 02.03.2012.
2. அரசாணை (1டி) எண்.222, பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை, நாள் 03.09.2014.
3. அரசு கடித எண்.9657/ப.க.4(1)/2016–1, நாள் 22.04.2016.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.018153/ எல்/இ3/2015, நாள் 09.05.2016.

-----

பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி, 998 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா ஒரு துப்புரவாளர் பணியிடம் வீதம் ரூ.1300–3000 + தர ஊதியம் ரூ.300/– என்ற சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் 998 துப்புரவாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும், 996 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 1005 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா ஒரு துப்புரவாளர் பணியிடம் வீதம் ரூ.1300–3000 + தர ஊதியம் ரூ.300/– என்ற சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் 2001 துப்புரவாளர் பணியிடங்களும் மற்றும் தலா ஒரு காவலர் பணியிடம் வீதம் ரூ.4800–10,000 + தர ஊதியம் ரூ.1300/– என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் 2001 காவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன. இப்பணியிடங்களுக்கு அரசாணை (1டி) எண்.222, பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை, நாள் 03.09.14–ன் மூலம் 31.03.2015 முடிய தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டது. மேற்காணும் ஆசிரியரல்லாத துப்புரவாளர் பணியிடம் 2999 மற்றும் காவலர் பணியிடம் 2001 ஆக மொத்தம் 5000 பணியிடங்களும் 01.04.2015 முதல்

ஐந்து ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு தொடர்பான தொடர் நீட்டிப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் மே 2016 முதல் மூன்று மாதங்களுக்கான ஊதியம் வழங்கிட அதிகார ஆணை (pay authorization) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

2. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதால், அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக் கல்வித் துறை, நாள் 02.03.12–ல் தோற்றுவிக்கப்பட்ட 5000 (2999 துப்புரவாளர் மற்றும் 2001 காவலர் பணியிடம்) ஆசிரியரல்லாத தற்காலிக பணியிடங்களுக்கு துறைத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் 01.04.2015 முதல் 30.06.2015 முடிய 3 மாதங்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 01.07.2015 முதல் ஏப்ரல் 2016 வரை தொடர்ந்து அரசால் ஊதியம் வழங்க அதிகார ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மே 2016 மாதத்திற்கான சம்பளப் பட்டியல் ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

3. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.31380/Edn-II/2016, நாள் 31.05.2016–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நிதி (கல்வி–II)த் துறை, சென்னை–9.